/

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035280

1. District மாவட்டம் : திருச்சி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 12/17 Date: நாள் 10.11.2017

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச 1973 Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 09.11.17 Date to : நாள் வரை 09.11.17

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1700 hrs Time to : நேரம் வரை 23.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2017 Time : நேரம் 10.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 KM தென் மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சி மேற்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சு. சத்திய நாராயணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சுப்ரமணியன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.09.1972 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் மாவட்ட நிலை ஆய்வுக்குழு அலுவலர் Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   — பின் பக்கம் இணைக்கப்பட்டுள்ளது —

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) திரு.மு.நல்லத்தம்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1), வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சி மேற்கு, திருச்சிராப்பள்ளி.
2) திரு.நாசர் முகமது, 41/2017, த/பெ.அக்பர்அலி, 102, கான்மியான் தெரு, பாலக்கரை, திருச்சி.
3) திரு.பரமசிவம் 50/2017, த/பெ.நாராயணன், 11, புதுத்தெரு, கிராப்பட்டி, திருச்சி–12.
4) திரு.ஸ்டீபன், 47/2017, த/பெ.லூர்துசாமி, 18, மேட்டுத்தெரு, பீமநகர், திருச்சி–1.
5) திரு.சதாசிவம், 45/2017, த/பெ. குமாராசாமி, 60, இந்திரா நகர், கொட்டுப்பட்டு, திருச்சி–4.
6) திரு.சேதுராஜ், 55/2017, த/பெ.மாணிக்கம் செட்டியார், 3/109 ஏ, புதுத்தெரு, சோமரசம்பேட்டை, திருச்சி–102.
7) திரு.பன்னீர்செல்வம், 54/2017, த/பெ. தவசிலிங்கம், 120, பில்லா தெரு, சோழன்நகர், திருச்சி–9

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 10.11.2017 10.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.சத்யநாராயணயன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி மாவட்டம் என்பவர் ஆஜராகி 09.11.2017ம் தேதி திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்த போது

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
10/11/17

15. Date & Time of despatch to the court: 10·11·2017
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

M. N... 10/11/17
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(M. NAVANEETHA KRISHNAN)

Name: பெயர் ம. நவநீதகிருஷ்ணன்
Rank: நிலை காவல் ஆய்வாளர், ..... No. எண் ..........
உ.த.க. பிரிவு
திருச்சி

* GCP-240 34(Type 2) 90,000 Cps 21 3 16(HCL-12)p 2

தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறையுடன்(மகஜர்) மேற்படி திடீர் சோதனை செயல்முறையின்படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு: அனுப்புநர் சு. சத்யநாராயணன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகம் - திடீர் சோதனை மேற்கொண்டது - தொடர்ச்சியாக மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) திரு.நல்லத்தம்பி 42/17, த/பெ முத்துசாமி என்பவாது குடியிருப்பினை(தங்கியிருந்த அறை) சோதனை செய்தது குறித்து மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 09.11.2017ம் தேதி, மாலை சுமார் 16.30 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் அலுவல் சாட்சி திரு.டேவிட்லியோ, வருவாய் ஆய்வாளர், வடக்கு, திருச்சி கிழக்கு வட்டம், திருச்சி மாவட்டம் ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் 17.00 மணி முதல் 20.30 மணிவரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது காவல் ஆய்வாளர் திரு.நகநீதகிருஷ்ணன் அவர்களால் ரூ.1,37,270/- கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள்(மகஜர்) 17.30 மணிமுதல் 20.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக திரு.நல்லத்தம்பி 42/17, த/பெ முத்துசாமி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) என்பவர் குடியிருந்த (தங்கியிருந்த அறை) வீட்டு எண்.14, 5வது கிராஸ் லேன், 3வது பிரதான சாலை, பொன்நகர், திருச்சி என்ற விலாசத்தில் இருந்த அறையை காவல் ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் அவர்கள் என் முன்பாகவும், வருவாய் ஆய்வாளர் திரு.டேவிட்லியோ என்பவர் முன்பாகவும் சோதனை செய்து ரூ.1,09,000/-ஐ சோதனை ஜாபிதா மூலம் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. இத்துடன் 09.11.2017ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, Sd.. 10/11/2017 (சு.சத்யநாராயணன்)

Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report on 10.11.2017 at 10.30 hours and registered a case in Trichy V&AC Cr.No.12/2017 u/s 102 Cr.P.C and 13(2) r/w 13(1)(d) of the PC Act 1988 on 10.11.2017 at 10.30 hours (Sd) M.NAVANEETHAKRISHNAN 10/11/2017 (M.NAVANEETHAKRISHNAN) Inspector of Police, V&AC, Trichy.

திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) இன்று 09.11.2017 மாலை சுமார் 17.30 மணிக்கு திருச்சி-திண்டுக்கல் செல்லும் சாலையில், பிராட்டியூர் கிராமத்தில், தென்கிழக்கு பார்த்து மூன்று தளத்துடன் அமைந்துள்ள அரசு கட்டிடத்தில் திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திரு.சத்யநாராணயன், த/பெ. (லேட்) சுப்ரமணியன் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி அவர்கள், திரு.டேவிட் லியோ, த/பெ. குழந்தைசேசு, வருவாய் ஆய்வாளர் (வடக்கு), திருச்சி கிழக்கு வட்டம் உதவியுடன், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கு.ராமச்சந்திரன் தலைமையில், திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) நடவடிக்கைகள்.

திருச்சி மாநகாத்தில் உள்ள திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும் அதில் தாங்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 09.11.2017 மாலை சுமார் 17.00 மணிக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால், மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது திருச்சி மாநகரம், பிராட்டியூர் பகுதியில் திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலைக்கு மேற்குபுறம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம் மூன்று தளங்கள் கொண்ட கட்டிடம் ஆகும். மேற்படி அலுவலக வளாகத்திற்கு கிழக்கு பக்கம் பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. அதனை அடுத்தார்போல் கட்டிடத்தின் தரைத்தளத்தில் போர்ட்டிகோவும், அதனை அடுத்து பிரதான வாயிலும், அதற்கு அடுத்து மேற்குபுறம் வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும், மேற்படி அறைக்கு தெற்குபுறம் அ பிரிவு அலுவலகம், அரசு கட்டணங்கள் வசூல் செய்யும் கவுன்டர்களும், அந்த அலுவலக அறைக்கு மேற்கு புறம், பி பதிவேடுகள் வைப்பறையும், அதனை அடுத்து மேற்குபுறம் கழிவரையும் அமைந்துள்ளது. மேற்படி அ பிரிவு அலுவலகத்திற்கு வடக்கு புறம் உ பிரிவு அலுவலகம், அரசு கட்டணம் வசூல் செய்யும் கவுன்டர்களும் அமைந்துள்ளது. மேற்படி தரைத்தளத்திலிருந்து முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் பிராதன வாயிலின் உள்ளே முன் தென்புறம் அமைந்துள்ளது. முதல் தளத்தில் மையப்பகுதியில் பெரிய வராண்டாவும், அதனை அடுத்து மேற்குபுறம் பதிவரையும், வராண்டாவிற்கு வடக்கு புறத்தில் கூட்ட அறையும், தெற்குபுறம் ஹாலும், அந்த ஹாலின் தெற்குபுறம் மோட்டார் வாகன

ஆய்வாளர்கள் அறையும், அந்த அறைக்கு கிழக்கு புறம் எல்.எல்.ஆர் பதிவு செய்யும் இருக்கையும், மேற்படி ஹாலிற்கு மேற்குபுறம் கழிவறையும் அமைந்துள்ளது. இரண்டாம் தளத்திற்கு செல்லும் படிகட்டுகள் கிழக்கு புறம் மையப்பகுதியில் அமைந்துள்ளது. மேலும் இரண்டாம் தளத்திற்கு படிகட்டுகள் இவ்வலுவலக கட்டிடத்தின் வெளியே தெற்குபுறமும் அமைந்துள்ளது. இரண்டாம் தளத்தில் துணை போக்குவரத்து ஆணையர், இணை போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம் மற்றும் மேற்படி அலுவலர்களின் அறைகளும், அலுவலக ஹால்களும் அமைந்துள்ளது. மூன்றாவது தளம் மொட்டை மாடி பகுதியாகும். கட்டிடத்தை சுற்றியும் காம்பவுண்ட் சுவர்கள் அமைந்துள்ளது.

மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ளே தெற்குபுறத்தில் முதல் அறையில் கண்காணிப்பாளர் திரு.விஜயபாஸ்கர் என்பவரும், அதனை அடுத்து ஹாலில் கிழக்கு பக்கம் தட்டச்சர் திருமதி.அன்புசெல்வி என்பவரும், அடுத்து அ3 உதவியாளர் திரு.ஹபிபாஅம்மாள் என்பவரும், அடுத்து காலி இருக்கையும், அதனை அடுத்து தெற்கு பக்கம் கணக்காளர் திருமதி.தமிழரசி என்பவரும் அவருக்கு அருகே அலுவலக உதவியாளர் திரு.நாகராஜும், துப்புரவாளர் திரு.மூக்கன் என்பவரும் நின்றுகொண்டிருந்தனர். மேலும் இதர சில இருக்கைகள் காலியாக இருந்தன. மேற்படி பகுதிக்குள் எட்டு தனி நபர்கள் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தனர். மேலும் வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில், துணை போக்குவாத்து ஆணையர் (கூடுதல் பொறுப்பு வட்டார போக்குவத்து அலுவலர்) திரு.உமாசக்தி அவர்கள் அமர்ந்திருந்தார். மேலும் வடக்கு பகுதியில் உ பிரிவு அலுவலகத்தில் சிலர் பணியாற்றிக்கொண்டிருந்தனர்.

மேற்படி தரைத்தளத்திலிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது கூஷ எட்டு தனிநபர்கள் மட்டும் அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். அவர்களை நிறுத்தி அவ்வலுவலகத்திற்குள் அவர்கள் வந்த விபரத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தனித்தனியாக விசாரித்தபோது கூஷ எட்டு தனி நபர்களும் அவர்களுடைய தனிப்பட்ட சொந்தப்பணி ஏதும் இல்லாமல் உள்ளே வந்திருக்கும் விபரமும், அவர்கள் அலுவலகத்திற்குள் அந்த நேரத்தில், அங்கு வந்ததற்கான சரியான காரணம் எதுவும், யாரும் சொல்லாததால், அவர்களை தனித்தனியே விசாரிக்க அவர்களில் 2 நபர்களை தவிர ஏனைய 6 தனி நபர்கள் கீழே கண்டவாறு இரண்டு பிரிவாக பணம் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபாம் பின்வருமாறு

| வ.எண் | பெயர்/முகவரி | சரியான விளக்கம் சொல்லாமல் வைக்கப்பட்டிருந்த பணம் / கையூட்டாக பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்று சந்தேகத்திற்குட்பட்ட பணம் வைத்திருந்த இடம் | சொந்தப்பணம் பணம் என்று தெரிவித்த பணம் இருந்த இடம் |
|---|---|---|---|
| 1 | திரு.நாசர் முகம்மது, 41/2017, த/பெ.அக்பர்அலி, 102, கான்மியான் தெரு, பாலக்கரை, திருச்சி. | ரூ.15,000/– பேண்டின் இடது புற சைடு பாக்கெட்டில். | ரூ.290/– மேல்சட்டையின் இடது மேல் வெளிப்புற பாக்கெட்டில். |
| 2 | திரு.பரமசிவம் 50/2017, த/பெ.நாராயணன், 11, புதுத்தெரு, கிராப்பட்டி, திருச்சி–12. | ரூ.16,000/– மேல்சட்டையின் வெளிப்புற மேல் இடது பாக்கெட்டில். | ரூ.400/– பேண்டின் பின்பாக்கெட்டில். |
| 3 | திரு.ஸ்டீபன், 47/2017, த/பெ.லூர்துசாமி, 18, மேட்டுத்தெரு, பீமநகர், திருச்சி–1. | ரூ.18,000/– பேண்டின் இடது சைடு பாக்கெட்டில் | ரூ.100/– மேல்சட்டை இடது வெளிப்புற பாக்கெட்டில். |
| 4 | திரு.சதாசிவம், 45/2017, த/பெ. குமாராசாமி, 60, இந்திரா நகர், கொட்டப்பட்டு, திருச்சி–4. | ரூ.4000/– மேல் சட்டையில் இடது உள்புற பாக்கெட்டில். | ரூ.530/– பேண்டின் பின்புற பாக்கெட்டில். |
| 5 | திரு.சேதுராஜ், 55/2017, த/பெ.மாணிக்கம் செட்டியார், 3/109 ஏ, புதுத்தெரு, சோமரசம்பேட்டை, திருச்சி–102. | ரூ.9,000/– பேண்டின் வலது புற சைடு பாக்கெட்டில். | ரூ.100/– மேல்சட்டை இடது வெளிப்புற பாக்கெட்டில். |
| 6 | திரு.பன்னீர்செல்வம், 54/2017, த/பெ. தவசிலிங்கம், 120, பில்லா தெரு, சோழன்நகர், திருச்சி–9 | ரூ.9,000/– மேல்சட்டையின் இடது வெளிப்பாக்கெட்டில். | ரூ.300/– பேண்டின் பின்புற பாக்கெட்டில். |
| | மொத்தம் | ரூ.71,000/– | ரூ.1,720 |

மேலே அட்டவணையில் கண்ட வரிசை எண் 1 முதல் 6 வரையிலான தனி நபர்களிடம் உள்ள சொந்த பணம் தவிர, அவர்கள் வைத்திருந்த மற்ற பணம் பற்றி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், அவர்களை தனித்தனியே விசாரிக்க, அவர்கள் சரியான விளக்கம் சொல்லாமல், மவுனமாக இருந்தனர். ஆகையால், மேற்படி பணம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக, யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.71,000/– காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலே அட்டவணையில் கண்ட 1 முதல் 6 வரையிலான தனி நபர்கள் தனியாக வைத்திருந்த மேற்படி மொத்த பணம் ரூ.1,720/- தங்களுடைய செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று அவர்கள் சொன்னதால் அந்த பணம் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதேபோல், மற்ற இரண்டு தனி நபர்களில் திரு.பிரசாத், வயது 36/2017, த/பெ.சீதாராமதாஸ், 30, மேலவிபூதிபிரகாரம், திருவனைக்காவல், திருச்சி என்பவரிடம் டி.என்.45 BC 9196, டி.என்.45 BJ 0875 மற்றும் டி.என்.45 E 0942 வாகனங்களுக்குரிய மொத்தம் 3 ஆர்.சி. புத்தகங்களும், அவருடைய சொந்தப்பணம் ரூ.50/- இருந்தது. மேலும், திரு.கணேசன், 36/2017, த/பெ.திருஞானம், 18, கீழ கொசத்தெரு, பீமநகர், திருச்சி-1 என்பவரிடம் டி.என்.81 W 1048, டி.என்.81 Y 7621 மற்றும் டி.என்.45 AU 9975 வாகனங்களுக்குரிய மொத்தம் 3 ஆர்.சி. புத்தகங்களும், அவருடைய சொந்தப்பணம் ரூ.60/- இருந்தது. மேற்படி ஆர்.சி. புத்தகங்களும், சொந்தப்பணமும் மேற்படி இரண்டு நபர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும், தென்புறம் உள்ள அலுவலக ஹாலிற்கு மேற்குபுறம் பி பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்த அறையினுள் மேற்குபுற சுவர் ஓரமாக ஜன்னலுக்கு அருகே உள்புறம் கீழே தரைப்பகுதியில் இறைந்த நிலையில் 2000, 500, 100, 50 ரூபாய் நோட்டுகளாக கிடந்தது. மேலும், மேற்படி ஜன்னலுக்கு அருகே வெளிப்புறம் கீழே தரைப்பகுதியில் இறைந்த நிலையில் 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகளாக கிடந்தது. அவ்வாறு இறைந்து கிடந்த பணம் பற்றி அவ்வலுவலகத்தில் பணியில் இருந்த மேற்படி அலுவலர்களிடமும், அங்கிருந்த மேற்படி தனி நபர்களிடமும் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் கேட்க, அவர்கள் யாரும், அந்த இரண்டு வகையான பணத்திற்கு உரிமை கோரவில்லை. ஆகையால், மேற்படி ஜன்னலுக்கு உள்புறம் இறைந்து கிடந்த 2000, 500, 100, 50 ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.14,750/- இருந்தது. அதேபோல் மேற்படி ஜன்னலுக்கு வெளியே கீழே தரைப்பகுதியில் இறைந்த நிலையில் கிடந்த 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.4,320/- இருந்தது. ஆகையால், மேற்படி பணம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக, யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்திருந்த பணத்தை, யாராவது வீசி எறிந்துவிட்டு சென்று இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.19,070/- காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னர், முதல் தளத்திற்கு சென்று தெற்குபுறம் ஹாலில், தெற்குபக்கம் கண்ணாடியால் தடுக்கப்பட்ட தனி அறையில் வடக்கு பார்த்து சேர் டேபிள் போட்டு அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) திரு.நல்லதம்பி அவர்களும், அந்த இருக்கைக்கு அருகே கிழக்கு புறம்

வடக்கு பார்த்து சேர் டேபிள் போட்டு அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-2) திரு.குணசேகரன் அவர்களும் அமர்ந்திருந்தனர். அந்த அறைக்கு கிழக்குபுறம் திரு.கோவிந்தாரஜ் என்பவர் ஒரு இருக்கையில் அமர்ந்திருந்தார்.

முதல் தளத்தில் இருந்த மேற்படி மூவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது கூஷ மூன்று அலுவலர்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) திரு.நல்லதம்பி என்பவர் மட்டும், அவரது இருக்கையைவிட்டு வேகமாக எழுந்து நின்று வலது பேண்ட் பாக்கெட்டிலிருந்து 500, 100 நோட்டுக்களை கத்தையாக எடுத்து அவாது இருக்கைக்கு பின்புறம் தரையில் வீசிவிட்டு பதட்டத்துடன் நின்றுகொண்டிருந்தார். அவரை காவல் ஆய்வாளரும், மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலரும் அமைதிபடுத்தி அவாது இருக்கையிலேயே அமரும்படி செய்யப்பட்டது. மேலும், அவரிடம் மேற்படி தரையில் வீசப்பட்ட பணம் பற்றி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்க, அவர் சரியான விளக்கம் / கணக்கு எதுவும் சொல்லாமல், மவுனமாக இருந்தார். அந்த பண நோட்டுக்களை எடுத்து எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.17,200/- இருந்தது. மேலும், அவரிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என்று மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்க, அவரது இருக்கைக்கு கீழே இருந்த அவருடைய பேக்கிலிருந்து 2000, 500, 100 நோட்டுகள் கத்தையாக இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்க, அவர் சரியான விளக்கம் / கணக்கு எதுவும் சொல்லாமல், மவுனமாக இருந்தார். அந்த பண நோட்டுக்களை எடுத்து எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.30,000/- இருந்தது. மேலும், இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் கையிருப்பு பதிவேட்டில் இன்று 09.11.2017 தேதியிட்டு திரு.மு.நல்லதம்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) ரூ.200/- எழுதப்பட்டு, அவரால் கையொப்பம் செய்யப்பட்டு, மேலும், 12 அலுவலர்கள் அவாவர்களது கையிருப்புத் தொகையை எழுதி கையொப்பம் செய்துள்ள பதிவேட்டை திரு.மு.நல்லதம்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) அவர்களிம் காண்பித்து, ரூ.200/- கையிருப்பு தொகைக்கு பதிலாக மேற்படி மொத்தம் ரூ.47,200/- இருப்பது பற்றி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் கேட்க, அவர் சரியான விளக்கம் / கணக்கு எதுவும் சொல்லாமல், மவுனமாக தலையை குனிந்தபடி இருந்தார்.

ஆகையால், மேற்படி பணம், மேற்படி திரு.நல்லதம்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை1) அவர்கள், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலத்திற்கு அலுவலாக வந்த பொது மக்களிடமிருந்து நேரடியாகவோ, பொது மக்களிடமிருந்து இடைதரகர் மூலமாகவோ கையூட்டாக கேட்டுப்பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.47,200/- காவல் ஆய்வளார் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், அவர் அவரது சட்டைப்

பையிலிருந்து ரூ.200/– பணத்தை காண்பித்து அவரது சொந்தப்பணம் என்று சொன்னதால், அப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி சொல்லப்பட்டது. அதேபோல், மேற்படி மற்ற இரண்டு அலுவலர்களும் அவர்களது சொந்தப்பணத்தை காண்பித்து அவர்களது சொந்தப்பணம் என்று சொன்னதால், அப்பணத்தை அவரவர்களேயே வைத்துக்கொள்ளும்படி சொல்லப்பட்டது.

திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் (பொறுப்பு) திரு.உமாசக்தி அவர்கள் மூலமாக 09.11.2017 தேதியில் வசூல் செய்யப்பட்ட அரசு கட்டண விபரங்கள் கணிணி மூலம் பிரிண்ட் எடுத்து பெறப்பட்டது. மேலும், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு–2017 மற்றும் கையிருப்பு பதிவேடு–2017 ஆகியவையும் அவர் மூலமாக பெறப்பட்டு மேல்நடவடிக்கைகாக திரு.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர் அவர்களால் கைப்பற்றப்பட்டது.

பின்னர், மேற்படி ஆஜரிலிருந்த நிரந்தர பணியாளர்கள் அனைவரிடமும் இவ்வலுவலகத்தில் பாரமரிக்கப்பட்டுவரும் கையிருப்பு பதிவேட்டில் உள்ள தொகைகளை தவிர வேறு பணம் எதுவும் அவர்களிடம் இல்லாததால், அவர்களிடமிருந்த பணத்தை அவரவர்களையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. மேலும், மாலை சுமார் 18.00 மணியவில் பெண் பணியாளர்களை மட்டும் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்கண்ட 8 தனிநபர்களிடமும், ஆஜரிலிருந்த அனைத்து அலுவலர்களிடமும் விசாரணைக்கு தேவைப்படும்போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

திடீர் சோதனையின்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த துணை போக்குவரத்து ஆணையர் (பொறுப்பு மேற்கு வட்டார போக்குவத்து அலுவலர்) திரு.உமாசக்தி அவர்களிடம் திடீர் சோதனை நடவடிக்கையில் உடன் இருக்கும்படி தெரிவிக்கப்பட்டது.

இந்த திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் சோதனை செயல்முறைகளில் 8 பக்கங்களின் அடியில் திருச்சி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு.சத்யநாராணயன், திருச்சி கிழக்கு வட்டம், வருவாய் ஆய்வாளர் (வடக்கு), திரு.டேவிட் லியோ, காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர், 8வது பக்கத்தில் மட்டும் மேற்படி 3 அலுவலர்களும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ராமச்சந்திரன், திருச்சி, துணை போக்குவரத்து ஆணையர், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலர்(பொறுப்பு) திரு.உமாசக்தி திருச்சி, மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திரு.மு.நல்லதம்பி மேலும், தனிநபர்களான திரு.நாசர்முகமது, திரு.பரமசிவம், திரு.ஸ்டீபன், திரு.சதாசிவம், திரு.சேதுராஜ் திரு.பன்னீர் செல்வம், மற்றும் கணிணியில் தட்டச்சு செய்த தலைமை காவலர் திரு.பாஸ்கரனும் கையொப்பம் செய்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக 22.00 மணிமுதல் 23.00 மணிவரை திருச்சி, மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திரு.மு.நல்லதம்பியின்

தங்கியிருந்த அறையில் நடைபெற்ற சோதனையில் திரு.நல்லதம்பி வைத்திருந்த பணத்திற்கு சரியான விளக்கம் / கணக்கு சொல்லாததால் அப்பணம் கையூட்டுப் பணம் என கருதி கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் ரூ.1,09,000/– மற்றும் ஆவணங்களை கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட சோதனை ஜாபிதாவில் காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன், திருச்சி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு.சத்யநாராணயன், திருச்சி கிழக்கு வட்டம், வருவாய் ஆய்வாளர் (வடக்கு), திரு.டேவிட் லியோ, திருச்சி, மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1) திரு.மு.நல்லதம்பி மற்றும் அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் திரு.கருப்பையா ஆகியோர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

மேற்படி திடீர் சோதனை செயல்முறையில் கண்டுள்ள எதிரிகள் 1)திரு.மு.நல்லதம்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை–1), வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சி மேற்கு, 2)திரு.நாசர்முகமது 3)திரு.பரமசிவம், 4)திரு.ஸ்டீபன், 5)திரு.சதாசிவம், 6)திரு.சேதுராஜ் மற்றும் 7)திரு.பன்னீர் செல்வம் ஆகியோர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்–12/2017 ச/பி 102 Cr.P.C மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 ச/பி 13(2) உ/இ 13(1) (d) ன்படி இன்று 10.11.2017ம் தேதி 10.30 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.சு.சத்யநாராயணன் அவர்கள் கொடுத்த 10.11.2017 தேதியிட்ட கடிதம், 09.11.2017 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள்(மகஜர்) அசல் மற்றும் வீட்டு சோதனை ஜாபிதா அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

M. N... 10/11/17
(M. NAVANEETHA KRISHNAN)
Inspector of Police,
VSAC, Trichy.